# முல்லைத்தீவில் இராணுவத்தினர் மீது தமிழ் ஊர்காவற் படையினர் தாக்குதல்

மக்களின் நான்கு விலை ரூபா: 4 · 50

முரசொலி

முரசு 05 ஒலி 170 பிரசோற்பதி வைகாசி 03 (17-05-1991) வெள்ளி

## விவசாயிகளைத் தாக்கிய படையினர் தப்பியோடினர்

முல்லைத்தீவு பட்டிக்குடியிருப்பு பகுதி வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயிகள் மீது தாக்குதல் நடாத்திய இராணுவத்தினர் மீது தமிழ் ஊர்காவற் படையினர் தாக்குதல் நடாத்தி அவர்களை விரட்டியடித்தனர். நேற்று முன்தினம் பிற்பகல் தனிக்கல்லாறு முகாம் இராணுவத்தினர் பட்டிக்குடியிருப்பு பகுதிக்கு முன்னேறி வந்து அங்கு வயலில் நின்ற விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் பீதியடைந்த விவசாயிகள் சிதறியோடினர். இச்சம்பவமறிந்த தமிழ் ஊர்காவற் படையினர் அப்பகுதிக்கு விரைந்து படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தினர் இதைத் தொடர்ந்து படையினர் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். 71

★ பிரான்ஸில் தொடர்பு சாதனங்கள் மூலம் பிரசாரம்

# தொண்டர் நிறுவனங்களை வெளியேற்ற அரச முயற்சி

## பிரெஞ் அரசின் கண்டன அறிக்கை

இலங்கையில் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்கள் மீது ஆயுதப்படையினர் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல் குறித்து பிரெஞ் அரசு கண்டன அறிக்கை ஒன்றை கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய வாகனங்கள் மீதும், எம். என். எப். என்ற பிரெஞ் நடமாடும் வைத்தியக்குழு மீதும் திட்டமிட்ட அடிப்படையிலும், நாட்டைவிட்டு வெளியேற்றும் நோக்கிலுமே வவுனியாவில் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரெஞ் அரசு விடுத்துள்ள இக்கண்டன அறிக்கை அந்நாட்டு வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டன. பிரெஞ் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளதுடன் உலக நாடுகளிலுள்ள தொண்டர் நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டன.

இதேவேளை இங்கு தங்கியுள்ள இருபத்தைந்து பேர் கொண்ட வைத்தியகுழு அரசின் விசாரணைக் குழுவின் அறிக்கையைப் பொறுத்தே தனது பணியை ஆரம்பிக்கவுள்ளதாக பிரட்மன் வீரக்கோன் நேற்று குறிப்பிட்டார். ப 11

## 500 தொண்டர் ஆசிரியர்கள் மாவட்டத்தில்நியமனமாவர்

யாழ் மாவட்டத்திற்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் ஜூலை மாதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இங்கு 500 பேர் தொண்டர் ஆசிரியராக நியமிக்கப்படவுள்ளனர். ஏற்கனவே கல்வித் திணைக்களத்திற்கு 400 பேரின் பெயர் பட்டியல் கிடைத்துள்ளது. அதேவேளை மனு செய்தவரில் இருந்து 100 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## வெளியேறமுயன்ற படையினர்மீது கட்டுவனில் தாக்குதல்

நேற்று முன்தினம் கட்டுவன் முகாமிலிருந்து வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

சில மணிநேரம் நடைபெற்ற தாக்குதலையடுத்து படையினர் முகாமுக்கு பின்வாங்கிச் சென்றுவிட்டனர். படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை 71

## காயமடைந்த பிரெஞ் டாக்டர் சாட்சிக்கு அழைக்கப்படுவர்?

வவுனியாவில் நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து தாயகம் திரும்பியுள்ள டாக்டரும் இரு தாதிகளும் சாட்சியத்திற்கென அழைக்கப்படுவார்களா என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

இலங்கை வந்துள்ள எம். என் எப். நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் உட்பட பலருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். ஆயினும் அமைப்பின் பிரதிநிதிகளுக்கு இன்னமும் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை வெளியாகும் வரை பிரெஞ் எம். எஸ். எப் நிறுவனம் வடகிழக்கில் தனது சேவையை நடத்தாது என மேற்படி அமைப்பின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். 38

## 23 ஆம் திகதி பரீட்சை

கடந்த 6 ஆம் திகதி (6.5.91) முதல் இடை நிறுத்தம் செய்யப்பட்ட க. பொ. த. உயர் தர விசேட பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி வியா

—04 ஆம் பக்கம் பார்க்க

## 3000 படையினர் காயம்

வடக்குக் கிழக்குப் பகுதியில் கடந்த பதினொரு மாதங்களாக நடைபெற்ற போரில்

—04 ஆம் பக்கம் பார்க்க

வவுனியா சம்பவங்களால்

## பல வடபகுதி லொறிகள் கொழும்பில் தவம் கிடக்கின்றன

கடந்த இரு வாரங்களாக வவுனியாவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுமார் 400 லொறிகள் உணவுப் பொருட்களுடன் கொழும்பில் தவம் கிடக்கின்றன.

இதனால் லொறிச் சாரதிகளும், கிளினர்களும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. 38

## மட்டக்களப்பில் உரம் படையினரால் பறிமுதல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் எழுவான்கரையிலும் படுவான்கரைப் பிரதேசத்திலும் செய்கை பண்ணப்பட்ட கால போக வேளாண்மைகள் உரம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கல்வி உத்தியோகத்தருக்கு 1200 ரூபா பயணச் செலவு

வடமாகாணத்தில் உள்ள கல்வித் திணைக்களங்களில் பணிபுரியும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் வவுனியாவுக்கு அப்பால் உத்தியோகபூர்வ கடமைக்காக சென்று வருவதற்கு 1200 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பான கடிதம் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் கல்வித் திணைக்களங்களுக்கு

04— ஆம் பக்கம் பார்க்க

## தாண்டிக்குளத்தில் படையினர் பயணிகளை சோதிக்கின்றனர்

விடுதலைப்புலிகளின் தாக்குதலையடுத்து ஓமந்தைப் பகுதியில் இருந்து பின்வாங்கிய இராணுவத்தினர் தாண்டிக்குளத்தில் தங்கியுள்ளனர்.

தாண்டிக்குளம் சோதனை முகாமில் உள்ள படையினர் தற்போது பயணிகளைச் சோதிப்பதாக அங்கிருந்து நேற்று யாழ் வந்த பயணிகள் தெரிவித்தனர்.

கடந்தவாரம் ஓமந்தைப் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சினால் அங்கிருந்த தேவாலயம், மகாவித்தியாலயம் என்பன சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## வெற்றிபெற்ற வேட்பாளர் மனைவி நஞ்சருந்தித் தற்கொலை

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஒரு வேட்பாளரின் மனைவி நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

பொலன்னறுவை நகரசபை தேர்தலில் போட்டியிட்ட மடகும்புர என்பவரின் மனைவியே இவ்வாறு பரிதாபகரமான முறையில் மரணமடைந்தார்.

பிரஸ்தாப வேட்பாளர் வாக்களிப்பு முடிவடைந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை ஸ்ரீலங்கா அரசு மறுக்கிறது!

இனப்பிரச்சினை தீர்விற்காக விடுதலைப்புலிகளுடன் அரசபேச்சுவார்த்தை நடாத்த ஆலோசித்துவருவதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மறுத்துள்ளார். தமிழர் பிரச்சினையை தீர்ப்பதிலோ விடுதலைப்புலிகளுடனான அரசின் உறவிலோ அரசு புதிய கொள்கை எதையும் தற்போது கையாளவில்லை எனக் குறிப்பிட்ட பிரட்மன் வீரக்கோன், புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்வதோ பேச்சுவார்த்தை நடாத்தவோ அரசு ஏற்கனவே விதித்த நிபந்தனைகளை தளர்த்தவுமில்லை என்றார்.

## வீரமரணம்

அம்பாறை தம்பிலுவில் வேலாயுதபுரம் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் ஜன் வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். 71

# சுரக்குடிநீர், சுக்மல்கோப்பி, குறிஞ்சிபிஸ்கட், நீர்க்கோவை, பூச்சுமருந்து; உள்ளூர் மூலிகைகளைப்பயன்படுத்தி சித்தமருத்துவ மாணவர்சாதனை!

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் உள்ளூர் இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி பதினொரு வகையான மருத்துவ மற்றும் சத்துணவுகளைத் தயாரித்துள்ளனர்.

'சுக்மல்' - மூலிகைகள் சேர்ந்த ஆரோக்கிய கோப்பி பானம், 'சத்து' - நிறையுணவு, இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'வஜிர பற்பொடி' 'வளர் நுளம்புச்சுருள்', நீரிழிவு நோயாளருக்கான 'குறிஞ்சி பிஸ்கற்', 'நீர்க்கோவை' - தலைவலி பூச்சு மாத்திரை மற்றும் சுவாசபேதி மாத்திரை, சுரக்குடிநீர், இருமல் குடிநீர், அதிசார குடிநீர், பிதுவர் இருமி குடிநீர் ஆகிய பதினொரு பொருள்களையே சித்த மருத்துவர்கள் உள்ளூர் மூலிகைகளைப்பயன்படுத்தி முதல் கட்டமாக உற்பத்தி செய்துள்ளனர்.

இந்த உற்பத்திகளின் அறிமுகவிழா கைதடி சித்த மருத்துவ அரங்கில் இன்றுவெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சித்த மருத்துவத்துறைத் தலைவர் உ. பவானி, விரிவுரையாளர் டாக்டர் சே. சிவசண்முகராஜா, கலைப்பாடபீடாதிபதி பேராசிரியர், பொ. பாலசுந்தரம்பிள்ளை, சித்த மருத்துவப் போதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் வி. கைலாசபதி, மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், மாநகரசபை ஆணையாளர் வே. பாலசிங்கம், உள்ளூராட்சி சபை ஆணையாளர் சு. சிவகலாலா, துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா உட்பட பலர் இவ் அறிமுக விழாவில் கலந்து கொள்வுள்ளனர் இப் பொருள்களின் அறிமுக விற்பனையும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. (74)

## தமிழரைத் தாக்கியோர்இனங்காணப்பட்டும் அவர்கள்மீது நடவடிக்கை இல்லை

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த பாராவல தோட்டத் தொழிலாளர்களைத் தாக்கி அவர்களது குடியிருப்புக்களை எரித்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் பொலிஸாரினால் அவர்கள் கைது செய்யப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் 16 காம்பிராக்களைக் கொண்ட ஒரு 'லயன்' எரிந்து சாம்பராகியுள்ளது அத்துடன் சுமார் நூறு தமிழ்க்குடும்பங்கள் தமது உடைமைகளை இழந்துள்ளன.

இவர்களில் ஆறுபேர் பலத்த வெட்டுக்காயங்களுடன் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### டிப்ளோமா இறுதிப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கையின் பகுதி ஒன்றுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சை இம்மாதம் 18, 19, 25, 26ஆம் திகதிகளில் யாழ் பிராந்திய நிலையத்தில் நடாத்தப்படவுள்ளது. ப-7

## காரைநகர் மாணவர்களுக்கு இன்றுமுதல் பிற்பகல் வகுப்புக்கள்

இடம்பெயர்ந்த காரைநகர் மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் என பண்டத்தரிப்பு உதவிக்கல்விப் பணிப்பாளர் ப. சண்முகராசா அறிவித்துள்ளார்.

தமது பெயர்களைப் பதிவு செய்த பாடசாலைகளான சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வட்டு - இந்து கல்லூரி, யாழ் நாவலர் மகாவித்தியாலயம் ஆகிய நிலையங்களுக்கு மாணவர்கள் இன்று சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு நான்குக்கு உட்பட்ட காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் யாழ் மாவட்டத்தில் வேறு எப்பாடசாலைகளிலாவது அவர்களது பிரதான வசதிக்கேற்ப அனுமதி பெறவிரும்பினால் அவர்களுக்கு குறித்த பாடசாலைகளில் தற்காலிக அனுமதி வழங்கப்படவேண்டுமென யாழ் கல்விப் பணிப்பாளர் சகல அதிபர்களையும் பணித்துள்ளார்.

## புத்தளம் அகதிகளுக்கு மாதம் 4 தடவை உலர்உணவு
# வடக்கிலோ ஒரு தடவை மட்டுமே!

வன்செயலினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசும், தொண்டர் நிறுவனங்களும் பாகுபாடு காட்டுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டோருக்கு அரச மாதாந்தம் தற்பொழுது ஒரு தடவை மட்டுமே உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

ஆனால் வடக்கிலிருந்து புத்தளம், அனுராதபுரம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கு மாதாந்தம் நான்கு தடவைகள் அரசினால் தற்பொழுது உலர் உணவு விநியோகிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தவிர புத்தளத்தில் தங்கியுள்ளோருக்கு சென் கிழவை, செம்பிறைச் சங்கங்கள் தமது பொறுப்பாக மேலதிகமாக மாதமொரு முறை உலர் உணவுகளை வழங்கி வருகின்றன; வெளிநாடுகளிலிருந்து தொண்டர் நிறுவனங்கள் வடக்கு கிழக்கு அகதிகளுக்கென வழங்கப்பட்ட உடுபிடவைகள் ரம்ழான் உற்சவத்தை முன்னிட்டு புத்தளம் அகதிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (74)

## தொலைக்கல்வி பரீட்சை நாளை ஆரம்பம் இன்று அனுமதி அட்டை கிடைக்கும்

தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான 1991ஆம் வருட இறுதிப் பரீட்சை இம்மாதம் ஆரம்பமாகவுள்ளதாகக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சைகள் இம்மாதம் 18ஆம், 19ம் திகதியிலும் அடுத்த மாதம் 1ஆம், 2ஆம் திகதியிலும் இடம்பெறவுள்ளன

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் இயங்கும் பலாலி ஆசிரியர் கலாசாலையில் இப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இன்று கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

## முல்லை. ஊரடங்கு நீக்கப்பட்டதும் விசேட பரீட்சை தொடரும்

முல்லைத்தீவில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரே வே க.பொ.த. உயர்தர விசேட பரீட்சைகள் நடாத்தப்படுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான திகதிகள் பத்திரிகைகள் மூலம் பின்னர் அறிவிக்கப்படவுள்ளன.

விசேட பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் கொழும்பு சாம்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரசூசிகை ஒழுங்கின் பிரகாரம், புதிய திகதிகள் அறிவிக்கப்பட்டதும் பரீட்சை தொடர்ந்து நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (74)

## மாதம் இருதடவை உலர் உணவு; அரச அதிபரிடம் சங்கம் கோரிக்கை

வலி வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு விசேட அடிப்படையில் மாதம் இருதவைகள் இலவச உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட வேண்டுமென தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ் அரச அதிபரைக் கேட்டுள்ளது.

சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சில தினங்களுக்கு முன்னர் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. சிவமகேசராஜா தலைமையில் இணைக்குழு உறுப்பினர், மகளிர்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

அத்துடன் வலி-வடக்கு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் எல்லையினுள் வாழ்வோருக்கு தற்போது அவர்கள் குடும்பத்தகையில் தங்கியுள்ள பகுதிகளில் இச்சங்கம் தனது கிளைகளை நிறுவி உலர் உணவு விநியோகத்தினை வழங்க விசேட அனுமதி வழங்க வேண்டுமெனக் கோருவதெனவும் இக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ப 10)

### நீடிப்பு

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் அண்மையில் கோரப்பட்ட தொழில் நுட்பவியல், விஞ்ஞான மாணிப்பட்ட கல்வி நெறிக்கான விண்ணப்பப்பத்திரங்கள் யாழ் பிரதேச நிலையத்திற்கு இன்னும் வந்து சேரவில்லை.

இக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி யாழ் பிரதேச நிலையத்திற்கு விண்ணப்பம் வந்து சேரும் திகதியைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் எனதெரியவருகிறது.

## பங்களாதேஷுக்கு 8000 அமெரிக்க துருப்புக்கள்;
## எதிர்க்கப் போவதாக எதிர்க்கட்சிகள் அறிவிப்பு!

சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள பங்களாதேஷில் நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்காக அமெரிக்கா ஐந்து ஹெலிக்கொப்டர்களையும், 8000 துருப்புக்களையும் டாக்காவிற்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்த 8000 துருப்பினர் சில மாதங்களுக்கு முன்னர் ஈராக்குடன் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தில் குவைத்தில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்களில் கணிசமானோர் கடற்படையினர் ஆனால் உதவிப் பணிக்கென அமெரிக்கத் துருப்புக்கள் பங்களாதேஷுக்குவருவதைத்தாங்கள் கறுப்புக் கொடி காட்டிஎதிர்ப்பு தெரிவிக்கப் போவதாக பங்களாதேஷில் பல எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

மீட்புப்பணிக்கு அமெரிக்க துருப்புக்கள் தேவையில்லை எனவும் அவை தெரிவித்துள்ளன.

## இந்தியத் தேர்தல் களம்

### வார்த்தை மாறவில்லை

தேர்தல் பிரசாரச் செலவு அதிகரித்துவிட்ட இந்த நேரத்தில் போன தேர்தலுக்கு வரைந்த சுவர் விளம்பரங்கள் பல ஊர்களில் பழுதில்லாமல் இருக்கிறது என்பது வேட்பாளர்களுக்கு ஆறுதல் தரும் ஒரு விஷயம். ஔரங்காபாத் தொகுதியில் சிவசேனாவிற்கு இப்படி ஒரு சௌகரியம். இந்த வகையில் அந்த வேட்பாளருக்கு செலவு குறைவு. "போன தேர்தலிலேயே பெட்ரோல், டீசலை மிச்சம் பிடித்து வைக்காமல் போனோமே?'' என்று புலம்புகிறார் வேட்பாளராகும் ஒருவர்.

### அவரை அல்ல

பதவி நீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி பட்னா பேச்சு அடிக்கொருதரம் கைதட்டல் பெற்றுத் தந்தது. ஆனால், அ.இ.அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவைத் தாக்கிப் பேசும் போது சற்று இடம் மாறிப் போனது போல தோன்றியது. "மக்கள் நலனை முன்வைத்துப் போராடி 20 முறை சிறை சென்றிருக்கிறேன். சினிமாவிலும், வீடியோ படங்களிலும் மட்டுமே சிறையைப் பார்த்திருக்கக் கூடியவர்கள் என்னைத் தேசத் துரோகி என்று சொல்கிறார்கள்'' என்று பேசினார். தலைமை வகித்த தேசிய முன்னணி சேர்மனும், சினிமா நடிகருமான என். டி. ராமராவ் முகத்தில் ஈயாடவில்லை.

### கனவு காண்கிறார் கருணாநிதி

'எம் ஜி ஆர் உருவாக்கிய அ. தி. மு. க. வை வீழ்த்துவதற்கு ஒரு துரோகக் கும்பலுடன் கருணாநிதி கை கோர்த்துள்ளார் அவரது பகல் கனவு ஒருபோதும் பலிக்காது. கருணாநிதியை தோல்வி பயம், தோல்வி ஜுரம் கவ்விக் கொண்டு இருக்கிறது. அவர் தோல்வி அடையப் போவது நிச்சயம் என தெரிந்து என்னென்னமோ பேசுகிறார்' இவ்வாறு அ. தி. மு. க. செயலாளர். ஜெயலலிதா அண்மையில் சுருப்புக்கோட்டையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

### கால் காலம்

இ காங்கிரஸ் எம்.பியும் நடிகையுமான ஜமுனா ராஜமுந்திரி தொகுதியில் அமோக வெற்றி பெறப்போவதாகச் சொல்லிக் கொள்கிறார். என்.டி.ஆருடன் பல படங்களில் ஜோடியாக நடித்துள்ள ஜமுனா, ஒரு படத்தில் தன் காலால் பேசியதை நினைவூட்டினார். ஸ்ரீகிருஷ்ண துலாபாரம் படத்தில் ஜமுனாதான் சத்தியபாமா; படத்தில் தன்னை வணங்கும் கிருஷ்ணனை எட்டி உதைக்கிறார். கிருஷ்ணனாக நடித்தவர் என்.டி.ஆர்.

# பொதுப்பரீட்சை பணியாளர் தெரிவு

# இனிமேல் திறமை அடிப்படையில்

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பணிகளை மேற்கொள்வதற்காக ஆசிரியர்களைத் தெரிவதில் புதிய நடைமுறை பின்பற்றப் பட உள்ளது. இதற்காக தகுதி, திறமையின்படி புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட உள்ளார்கள்.

பரீட்சைப் பணிகளான மேலதிக இணைப்பாளர், இணைப்பாளர், மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர், நோக்குநர் போன்ற பதவிகளுக்காக ஆசிரியர்களிடம் இருந்து புதிய நடைமுறைக்கேற்ப தற்போது விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கடந்த காலங்களில் பரீட்சைப்பணிகளை மேற்கொள்வதற்கு ஆசிரியர்கள் வட்டாரக்கல்வி அதிகாரிகளின் சிபார்சுக்களையே தெரிவு செய்யப்பட்டுவந்தனை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப - 10)

## அவர்களுக்கு பொழுதுபோக்கு அதிகாரிகளுக்கோ தலையிடி

இந்தியப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அநேக மான சுயேட்சை வேட்பாளர்கள் பொழுது போக்கிற் காகவே தேர்தலில் போட்டியிடுகின்றனராம்.

இவர்கள் தாம் தோற்பது நிச்சயமெனத் தெரிந்து விட்ட பிறகும் தேர்தல் களத்தில் உள்ளனராம்.

ஆயிரக்கணக்கான இந்த சுயேட்சை வேட்பாளர்க ளால் இந்தியாவில் தேர்தலில் போட்டியிடுவோரின் தொகை இம் முறை பன்மடங்காக அதிகரித்துள்ள துடன் இவர்களுக்கு தேர்தல் சின்னங்களை ஒதுக்குவதி லும், வாக்குச்சீட்டு அச்சடித்தல், வாக்களிப்பு ஏற் பாடுகளை மேற்கொள்ளலிலும் இந்திய தேர்தல்திணை க்களம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகிறதாம்.

சில சுயேட்சை வேட்பாளர்கள் தாம் தற்கொலை செய்வதன்மூலம் தேர்தலைக் குழப்பப்போவதாகவும் அடிக்கடி பயமுறுத்தி வருகின்றனராம்.

## புதியவீடுகளை அமைக்க கிழக்கில் முஸ்லிம் பகுதிகளே தெரிவு

15லட்சம்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகள் முஸ்லிம்கள் வதியும் பகுதிகளிலேயே அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஏறாவூர், வாழைச்சேனை, கோறளைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பகுதிகளில் முஸ்லிம்கள் அதிகமாக வதியும் பிரிவுகளே இந்த வீடுகள் அமைக்கவெனத்தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஐம்பத்தியொரு லட்சத்து அறுபத்தி ஐயாயிரம் ரூபா இந்த வீடுகளை அமைக்க வென ஒதுக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் சத்திரசிகிச்சை

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் இருதயத்திற்கு இரத்தத்தை திசைதிருப்பும் சத்திர சிகிச்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

## தீவுப்பகுதி அலுவலகங்கள் திங்கள் முதல் பழைய இடத்தில்

தீவுப்பகுதி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து யாழ் நகரில் இயங்கிவந்த அரச திணைக்களங்கள், கூட்டுறவுத்தாபனங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பன எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் தீவுப்பகுதியில் முன்னைய இடங்களில் இயங்க வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளன. (19)

## பல்கலை. புதிய மாணவர் அனுமதி தாமதமாகலாமெனத் தகவல்

1990- 91 ஆம் கல்வியாண்டுக்குப் புதிய மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதில் காலதாமதமேற் படலாமெனத் தெரிவிக்கப் படுகின்றது.

1990- 91 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு 30 வீதம் கூடுதல் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் திட்டம் மந்தகதியில் நடை பெற்றுவருவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அநேகமான பல்கலைக்கழகங்களில் கூடுதல் மாணவர்களை அனுமதிப்பதற்கான வசதிகள் இல்லாதிருப்பதினால் மேலதிக வசதிகளை ஏற்படுத்தும் வரையில் புதிய மாணவர்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்படுமென வும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-1 1

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க ஆதரவில் கலாநிதி பா. சிவகடாட்சம் அவர்களால் இன்று 17ஆம் திகதி பிற்பகல் 3 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் 'சுதேச வைத்தியத்தில் மூலிகைகளின் பங்கு' என்னும் பொருள் பற்றி ஒரு கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

கலாநிதி சிவகடாட்சம் யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக உள்ளதுடன் இத் துறையில் பல நூல்களை இயற்றியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸ் தேர்தலில் போட்டியிட இமெல்டா மார்க்கஸ் விருப்பம்

பிலிப்பைன்ஸில் அடுத்தவருடம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதாக தற்பொழுது அமெரிக்காவில் வசித்துவரும் திருமதி இமெல்டா மார்க்கஸ் அறிவித்துள்ளார்.

இமெல்டா மார்க்கஸ் மீது ஊழல், திருட்டுக் குற்றச்சாட்டுகளின் பேரில் தற்பொழுது பிலிப்பைன்ஸில் வழக்குநடந்து வருகிறது.

மக்கள் விரும்பினால் அமெரிக்காவிலிருந்து மீண்டும் நாடு திரும்பித் தேர்தலில் போட்டியிடத் தான் தயாராக இருப்பதாக இமெல்டா தெரிவித்திருக்கிறார்.

## புங்குடுதீவில் கடும்தண்ணீர்பஞ்சம்; தாகம் தீர்க்க வீதிகளில் பந்தல்கள்

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, ஆகிய பகுதிகளில் இருந்து வரும் பிரயாணிகளின் நன்மை கருதி தண்ணீர்ப்பந்தல் ஒன்று புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கானருபாசெலவில் அமைக்கப்பட்டுள்ளஇந்த தாகசாந்தி நிலையம் காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணிவரை மக்களின் நலன்கருதித் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புங்குடுதீவு மடத்துவெளி பழையதுறைப் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தண்ணீர்ப் பந்தல் தனது சேவையைத் தொடர்ந்து வருகிறது. (20)

### அங்காடி

அரியாலை சவாரத்னம் வீதிச் சந்தியில் பனம்பொருள் அங்காடி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அங்காடியை அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் நடாத்திவருகிறது.

இங்கு பனம் வெல்லம், பனஞ் சீனி, ஒடியல் மா, புழுக்கொடியல் மா, புழுக்கொடியல் பாம் பேஷா, போன்ற பொருள்களையும், பாய், பெட்டி கடகம், கலது போன்ற பொருள்களையும் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

## தென்னாபிரிக்கக்கறுப்பினத்தவரை நீதிமன்றமும் ஒதுக்குகிறது

திருமதி வின்னி மண்டேலா மீது விதிக்கப்பட்டுள்ள தண்டனை தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதனையே எடுத்துக்காட்டுவதாக தென்னாபிரிக்காவிலுள்ள மிகப் பெரிய கறுப்பர் குழுவான நாஷனல்சிவிக்ஸ்பரேஷன் அமைப்பு அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்க நீதிமுறை முழுவதையுமே மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் தற்பொழுது ஏற்பட்டுள்ளதாகவும் இவ் அமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை தனது மனைவிக்கு ஆறுவருட தண்டனை விதிக்கப்பட்டுள்ள சம்பவம் தனக்கும் தென்னாபிரிக்க அதிபருக்குமிடையேயான பேச்சில் பாதிப்பை ஏற்படுத்தாது என ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா அறிவித்திருக்கிறார்.

### தீவகப் பாடசாலைகள் திங்கள் ஆரம்பம்

யாழ் நகரப் பாடசாலைகளில் தற்காலிகமாக இயங்கி வந்த வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளை மீண்டும் 20ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தத்தமது பாடசாலைகளிலேயே இயங்குமாறு வேலணை உதவிக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

சீரற்ற நிலைமை காரணமாக இடம் பெயர்ந்த சகலரும் தத்தமது சொந்தப் பாடசாலைகளுக்குக் கடமைக்குச் செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார். (19)

## படுகொலை தொடரின்பங்களாதேஷ் தீர்வுஏற்படும் என்கிறார் ஜெயலலிதா

இலங்கையில் இனப் படுகொலை நிறுத்தப்படாவிட்டால் பங்களாதேஷ் நெருக்கடியில் இந்திராகாந்தி செய்ததுபோல் இராணுவ ரீதியில் நடவடிக்கையில் இறங்குவது குறித்து இந்தியா பரிசீலிக்கக்கூடும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் கூறியிருக்கிறார்.

தஞ்சாவூரில் வைத்து பிரபல ஆங்கில தினசரியான 'இந்து'வுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே ஜெயலலிதா இப்படித் தெரிவித்திருக்கிறார்.

'இலங்கையில் கற்றிலைத்த தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும், கொலை செய்யப்படுவதும் நிறுத்தப்படல் வேண்டும். இனப்படுகொலை தொடரும் வரை அகதிகள் அங்கிருந்து தமிழகத்திற்கு வரவே செய்வர். இலங்கையில் வாழ்வதற்கு தமிழர்களுக்கு உரிமை உண்டு. படுகொலை முடிவின்றித் தொடருமாயின் பங்களாதேஷ் விவகாரத்தில் இந்திரா காந்தி செய்ததுபோல் இராணுவத் தீர்வொன்றைக் காண்பது குறித்து இந்தியா சிந்தித்தால் அதில் தவறேதும் இல்லை' எனவும் இப்பேட்டியில் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

## மன்னாரில் நிவாரணம்

மன்னார் நகர உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 31ஆம் கட்ட நிவாரண வேலைகள் முடிவடைந்துள்ளன.

32, 33, 34, 35ஆம், கட்ட நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 17)

## இரும்புச்சத்து நெல்லி இரத்தசோகையை நீக்கும்

அமிலத்தன்மையுடன் குளிர்ச்சிப்பண்பும் கொண்டு உடல் வெப்பத் தணிவிப்பானாயும் இக்கனி விளங்குகிறது. இது தடையற்ற சிறுநீர்ப்போக்கிற்கு உதவுகிறது. சிறந்த இயற்கை மலமிளக்கியாகவும் விளங்குகின்றது. இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் இரத்த சோகை நோயைப் போக்கவும் உதவுகின்றது. மஞ்சள் காமாலை பசியின்மை ஆகிய தொல்லைகளில் இருந்து விடுவிக்கும் திறன் இதற்குண்டு. எலுமிச்சைச் சாறுடன் கலந்து நெல்லிச்சாறைப் பருக நுண்ணுயிர்களால் உருவாகும் சீதபேதி கட்டுப்படும்.

## கடற்படை அட்டகாசம்; கடும் காற்று; எரிபொருள் இல்லை

# குடாநாட்டில் மீனுக்குத் தட்டுப்பாடு

குடாநாட்டின் பல பகுதிகளிலும் தற்பொழுது மீன்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது இதன் காரணமாக மீனின் விலை எதிர்பாராத அளவிற்கு அதிகரித்துள்ளது.

ஆழ் கடலில் நடமாடும் கடற்படையினர் மீனவர்களுக்கு பெரும் தொந்தரவு செய்து வருவதன் காரணமாகவும், எண்ணெய் விலை அதிகரிப்புக் காரணமாகவும் ஆழ் கடலுக்கு செல்ல முடியாத நிலையினாலும் சிறிய கட்டுமரங்களில் கடும் காற்று காரணமாக ஆழ் கடலுக்கு செல்ல முடியாதிருப்பதாலும் பெரிய மீன் வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடும் அதிக விலை உயர்வும் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (43, 50)

## அரபு லீக்கின் புதிய செயலராக எகிப்திய வெளியுறவு அமைச்சர் தெரிவு

அரபுலீக்கின்புதியதலைமைச் செயலராக எகிப்திய வெளியுறவு அமைச்சர் டொக்டர் இஸ்மத் அப்துல் மெக்கிட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் அடுத்த ஐந்து வருட காலத்திற்கு இப்பதவியை வகிப்பார். அரபு லீக் அமைப்பில் 21 அரபு நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

நேற்று முன்தினம் கெய்ரோவில் இப்புதிய தெரிவு இடம்பெற்றது.

● மோசாட் விசாரணையில் முன்னாள் அமைச்சர் காமினி சாட்சி

# உலக உதவித்திட்டத்தில் பணிபுரிய சில இஸ்ரேலியர்கள் வந்தனர்

அந்த மகாவலி அபிவிருத்தித்திட்டத்தை மேற்கொண்டபோது இஸ்ரேல் கம்பனிக்கு ஒப்பந்தம் எதுவும் வழங்கப்படவில்லை.

இவ்வாறு முன்னாள் காணி காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி, அமைச்சர் காமினி திஸநாயக்கா 'மொசாட்' விசாரணை ஆணைக்குழு முன்பு சாட்சியமளிக்கையில் கூறினார்.

1980ஆம் ஆண்டு உலக உணவு உதவித்திட்டத்தின் கீழ் பல விவசாய நிபுணர்கள் இலங்கைக்கு வந்தபோது இஸ்ரேலிய பிரஜைகளும் வந்தனர்.

"நான் அமைச்சராக இருந்த போது எனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர் ஒருவர் மகாவலி அபிவிருத்தி திட்ட ஒப்பந்தக்காரரிடம் தேர்தல் பிரசாரத்துக்கு நிதி உதவி கேட்டதாகப் புகார் கிடைத்தது" என்றார்.

அந்த அமைச்சரின் பெயரை காமினி திஸநாயக்கா ஆணைக்குழு முன்பாக தெரிவிக்க மறுத்துவிட்டார். 38

வாக்காளர் அட்டை விநியோகம்

## தவறிய தபாற்காரர்கள் தற்காலிக வேலை நீக்கம்

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கத் தவறிய தபால் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தபால், தந்தி, தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி தெரிவித்துள்ளார்.

பல இடங்களில் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அவை நிரூபிக்கப்பட்டால் அந்த தபால்காரர் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 38

## சாதாரணதர விசேட பரீட்சையை ஆகஸ்டில் நடாத்த முயற்சி

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறாது தடைப்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை வடக்கு கிழக்கில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என கொழும்பில் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள 1991 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையுடன் ஒட்டியதாகச் சாதாரண தர விசேட பரீட்சையையும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (74)

கூட்டுறவுத்துறை அமைச்சர் தகவல்

## ப. நோ. கூ. சங்கங்களில் அரசியல் வாதிகளுக்கு இடமில்லை

நாட்டில் உள்ள ஆறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் விரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்.

அரசியலுடன் தொடர்புடையவர்கள் பல ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்களாக இருப்பதால் இந்த மோசடிகள் இடம் பெறுவதாகப் புகார் கிடைத்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

இனிமேல் எம் பிக்கள் மாகாணசபை உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இயக்குநர் சபையில் இடம்பெற முடியாது இதற்கான சட்டமூலம் விரைவில் கொண்டு வரப்படும் என்றும் அவர் சொன்னார். 38

## கிளிநொச்சியில் சிறுபோகம் பொசுபரசு அடிப்பசளை இல்லை

கிளிநொச்சிப்பகுதியில் சிறுபோக வேளாண்மை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் 'பொசுபரசு' சேர்ந்த அடிப்பசளைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தப்பசளையை வயல்களில் வீசவேண்டும் என்றும், விவசாயப்பகுதி வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்பசளை இன்றிமுறை சிறுபோகம் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது இதுசம்பந்தமாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் இங்கு வந்த 'லங்காமுதி' கப்பலில் 'பொசுபரசு' அடிப்பசளை கொண்டு வரப்பட்டதாகவும் ஆனால் அவை இறக்கப்படாது திரும்பிச் சென்றுள்ளதாகவும் அறியவருகிறது. ப-6

## கொழும்பு மாநகர வாக்குகள் கணேசலிங்கத்துக்கே அதிகம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் ஐ. தே. க சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் கணேசலிங்கமே அதிகரிப்பு வாக்குகளைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அடுத்த கொழும்பு மேயராக கணேசலிங்கம் நியமிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விசர்நாய்கடி மருந்து பற்றாக்குறை 43 பேர் பலியாகியுள்ளனர்

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் விசர் நாய்க்கடி மருந்தான ஏ. ஆர். வி. இல்லாமையால் 43 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

தற்போது இந்த மருந்து ஓரளவு கிடைத்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

யாழ் போதனா வைத்திய சாலையில் விசர் நாய்க்கடித்து 10 பேர் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப 11)

## தி. மு. க. வுக்கு ஆதரவாக பர்னாலா பிரசாரம்

தி மு. க. விற்கு ஆதரவாக முன்னாள் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவும் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்கிறார்.

நேற்று சென்னையிலும் இன்று திருச்சியிலும் அவர் தி. மு. க ஆதரவு பிரசாரக் கூட்டங்களில் பேசி வருகிறார்.

கடந்த ஜனவரி மாதம் தமிழக ஆட்சிக் கலைப்பை எதிர்த்து ஆளுநராக இருந்த பர்னாலா பதவி துறந்தார் என்பது தெரிந்ததே (38)

## யாழ் புதிய அரச அதிபராக மாணிக்கவாசகர் பதவியேற்றார்

யாழ் புதிய அரச அதிபராக கே. மாணிக்கவாசகர் நேற்று யாழ் செயலகத்தில் பதவியேற்றுக் கொண்டார்.

இவர் செயலக பிரிவுத்தலைவர்களைச் சந்தித்து அவர்களுடன் ஆலோசனை நடாத்திய பின்னர் தனது முன்னைய கடமைகளை ஒப்படைப்பதற்காக கிளிநொச்சிக்கு பயணமானார்.

திரு. மாணிக்கவாசகர் முன்னர் யாழ் உதவி அரசாங்க அதிபராகவும் அதன் பின்னர் யாழ் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராகவும், பதில் அரச அதிபராகவும் பணிபுரிந்து பின்னர் கிளிநொச்சி அரச அதிபராகப் பணி புரிந்தமை தெரிந்ததே. (33-74)

## தேர்தல் ஆணையாளரும் தபால் மா அதிபரும் புகார்

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு சில அரசியல்வாதிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட 'அரச பணி' என்வலப்புகள் தவறான வழியில் பயன்படுத்தப்பட்டதாகத் தபால் மா அதிபர் தேர்தல் ஆணையாளரிடம்புகார் தெரிவித்துள்ளார்.

இதுபோல வாக்காளர் அட்டைகளை சில தபால் ஊழியர்கள் விநியோகிக்கத் தவறியிட்டதாகவும் தேர்தல் ஆணையாளர் தபால் மா அதிபரிடம் புகாரிட்டுள்ளார். 33

### மூன்று கால்கள் ஆடு

ஆடு ஒன்று மூன்று கால்கள் உள்ள ஒரு குட்டியை நேற்று முன்தினம் இரவு ஈன்றுள்ளது இச்சம்பவம் புலோலி மத்தியில் நடந்தது. 38

### வாழைகள் சேதம் விவரம் சேகரிப்பு

உடும்பராய் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகள் தமது வாழைகளுக்கு அண்மையில் ஏற்பட்ட சேத விவரங்களை தத்தமது கிராம சேவையாளர்களிடம் அறிவித்து பதிந்துகொள்ளுமாறு உடும்பராய் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. சுந்தரேசன் அறிவித்துள்ளார். 33

### புலமைப் பரிசில் அனுமதி அதிகரிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுவோரின் தொகை 7500 பேராக அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது 5000 மாணவர்களே புலமைப் பரிசில் பெற்று வருகின்றனர் என சபையின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

### உதவி அரச அதிபர்

மன்னார் நகர் உதவி அரச அதிபர் திரு. தம்பு இராசலிங்கம் ஓய்வு பெறுவதையடுத்து அவரது இடத்திற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். 83

## வவுனியா மோதல்களின் போது 10லொறிகள் படையினரால் எரிப்பு

கடந்த வாரம் வவுனியா பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது தாண்டிக்குளத்திற்கும் நொச்சிமோட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பத்து லொறிகளும், 5க்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிளும் எரிந்த நிலையில் காணப்பட்டது.

கொழும்பிலிருந்து பொருட்களுடன் வந்த லொறிகள் முற்றாக எரிக்கப்பட்டு அவற்றின் அடிச்சட்டம் மட்டுமே அங்கு எஞ்சியிருந்ததாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

## அ. தி. மு. க. காங்கிரஸ் கூட்டு அரசு தமிழகத்தில் ஏற்படமாட்டாது

தமிழ் நாட்டில் அ. தி. மு. க. ஆட்சி அமைக்கப்பட்டால் இந்திரா காங்கிரஸ் வெளியிலிருந்தே தனது ஆதரவை வழங்கும் அ. தி. மு. க வுடன் இணைந்து காங்கிரஸ் ஆட்சி அமைக்காது எனத் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கூட்டணி ஆட்சியை அமைக்கும் நோக்கில் காங்கிரஸ் அ. தி. மு. கவுடன் இணையும் யோசனையில்லை அ. தி. மு. க. சொந்த பலத்தில் அமைச்சரவையை அமைக்க முடியாமல் போகும் அளவுக்கு நிலைமை பாதகமாக இல்லை எனவும் ராமமூர்த்தி மேலும் தெரிவித்தார். 38

பால் உற்பத்தி அதிகரிப்பால்

## கால்நடை வளர்ப்போர் நன்மையடைகின்றனர்

கிளிநொச்சிப் பகுதியில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது இதனால் கால் நடை வளர்ப்போர் நன்மையடைந்து வருகின்றனர்.

பால் விற்பனைச் சங்கமும் அண்மையில் திறக்கப்பட்டதை அடுத்து பால் விற்பனையால் அதிகலாபம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கைப் பசளையாக பெருமளவு எரு சேகரிக்கப்பட்டு வருவதால் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் நன்மையடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

---

**கல்வி...**

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகத்தர்கள் மாதத்தில் ஒரு தடவை பயணம் செய்யும்போது மட்டுமே இந்தப்பணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 78

**500 தொண்டர்...**

தாகவும் அறியவந்துள்ளது.

இவர்களின் நியமனம் கல்வி அமைச்சின் புதிய விதிமுறைக்கமையவே இருக்குமென உயர் கல்வி அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. (74)

**வெற்றி பெற்ற**

வாக்குகள் எண்ணும் கச்சேரிக்கு சென்றிருந்த சமயம் அவரது வீட்டிற்குச் சென்ற சிலர் "உங்கள் கணவர் கடத்தப்பட்டார்" என அவரது மனைவியிடம் தெரிவித்ததாகவும் இதனால் அதிர்ச்சியும் கவலையுமடைந்த மனைவி நஞ்சு அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 88

**23 ஆம் திகதி...**

முதல் கிழமை மீண்டும் ஆரம்பமாகலாமென கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 12

**3000 படையினர்...**

இதுவரை 1330 பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டனர். 3000 படையினர் காயமடைந்தனர் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் வோல்டர் பெர்னாண்டோ நேற்று தெரிவித்தார்"

**மட்டக்களப்பு...**

இல்லாததால் கைவிடப்படும் நிலையில் உள்ளன.

கல்முனையிலிருந்தும் மட்டக்களப்பிலிருந்தும் விவசாயிகள் யூரியா உரத்தை எடுத்துச் செல்லும் போது பாதுகாப்புப் படையினர் அவற்றை பறிமுதல் செய்கின்றனர். உரம் இனிமேல் கொண்டு செல்லக் கூடாதென்றும் படையினர் அறிவித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். 88

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ், (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "ஜஸ்மின் பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 17 .05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.